©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-1.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 46] சென்னை, புதன்கிழமை, நவம்பர் 25, 2009
கார்த்திகை 9, திருவள்ளுவர் ஆண்டு–2040

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2009–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 18–ஆம் நாளன்று குடியரசுத் தலைவரின் ஏற்பிசைவைப் பெற்றது ; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்ட எண் 35/2009**

***1961–ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தை அது தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துவதைப் பொறுத்த அளவில் மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.***

இந்தியக் குடியரசின் ஐம்பத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2008–ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இஃது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் 27/1961.

1–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1961–ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின், (1)–ஆம் பிரிவில், (4)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும்:—

"(4) இது, மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளரை வேலைக்கு அமர்த்தியிருக்கும், ஒவ்வொரு மோட்டார் போக்குவரத்து நிறுவனத்திற்கும் பொருந்தும்.".

32–A எனும் புதிய பிரிவைப் புகுத்துதல்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 32–ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**32–A**, குற்றச் செயல்களை இணக்கமான முறையில் தீர்வு செய்தல்:–

(1) **29**–ஆம் பிரிவின்படியோ அல்லது **32**–ஆம் பிரிவின்படியோ தண்டிக்கத்தக்க குற்றச் செயல் எதனையும், குற்ற வழக்குத் தொடுக்கப்படுவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ, தொழிலாளர் ஆணையரோ அல்லது இது குறித்து தொழிலாளர் ஆணையரால் அதிகாரமளிக்கப்படக் கூடிய பிற அலுவலர் எவராலுமோ, தொழிலாளர் ஆணையர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய தொகையானது அரசின் கணக்கிற்குச் செலுத்தப்படுவதன் பேரில் இணக்கமான முறையில் தீர்வு செய்யலாம்.

**வரம்புரை:–** ஆனால், இந்த உட்பிரிவின்படி செலுத்தத்தக்க தொகையானது, அவ்வாறு இணக்கமான முறையில் தீர்வு செய்யப்படும் குற்றச் செயல்களுக்காக விதிக்கப்படக் கூடிய தண்டனைத் தொகையின் அதிகபட்சத் தொகைக்கு மேற்படுதல் கூடாது.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி குற்றச் செயல் ஒன்று இணக்கமான முறையில் தீர்வு செய்யப்பட்டுள்ளவிடத்து, குற்றம் சாட்டப்பட்டவர், பாதுகாவலில் இருந்தால், அவர் விடுவிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய குற்றச் செயலைப் பொறுத்த வரையில் அவருக்கு எதிராக மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் கூடாது.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப்பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.